

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஃபோர்டு நிறுவனத்தின் IMG தலைவர் திருமதி கே ஹார்ட், துணைத் தலைவர் (சர்வதேச அரசாங்க விவகாரங்கள்) மேத்யூ கோட்லெவ்ஸ்கி, ஃபோர்டு இந்தியா இயக்குநர் (அரசாங்க விவகாரங்கள்) டாக்டர். ஸ்ரீபாத் பட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, ஃபோர்டு நிறுவனம் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் சி.ரவி தலைமையில் நடந்தது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, பொருளாளர் சி.நரசிம்மன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.தயாநிதி, ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர் கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நாட்டுக்காகவும் ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்த

# தியாகி இமானுவேல் சேகரனார் நினைவைப் போற்றுவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!



**சென்னை, செப். 12-**

**தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிந்துள்ள சமூக வலைதளப் பதிவில் நாட்டுக்காகவும் ஒடுக்க ப்பட்டோரின் முன்னேற்றத்துக்காக வும் உழைத்த தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவைப் போற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தீண்டாமையை ஒழிக்கவும் - சமூக விடுதலைக்காகவும் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களது நினைவு நாள் இன்று. நாட்டுக்காகவும் ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்துக்காகவும் உழைத்த அவரது வாழ்வைப் போற்றுவோம்!

சமத்துவமும் - சமூகநல்லிணக்கமும் மிளிர்ந்த சமூகத்தை நோக்கிய நமது பயணத்துக்கு அவரது தொண்டு உரமாகட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## திருவான்மியூர் முதல் அக்கரை வரையிலான சாலையினை

# ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, செப்.12-

கிழக்குக் கடற்கரைச் சாலையில், திருவான்மியூர் முதல் அக்கரை வரை உள்ள சாலையினை, ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளில், நிலஎடுப்பு, மின்சார வாரியத்தின் பயன்பாட்டுப் பொருட்களை மாற்றியமைத்தல், சென்னை குடிநீர் வாரியத்தின், குழாய் பதிக்கும் பணி மற்றும் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து, நேற்று (11.9.2024) சென்னை, தலைமைச் செயலக அலுவலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் அவர்கள், வருவாய்த்துறை, சென்னை குடிநீர் வாரியம், மின்சார வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளிடம் இப்பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, பணிகளை விரைந்து முடித்திட அறிவுரைகள் வழங்கினார்.

வருவாய்த்துறை அலுவலர்கள், எந்தெந்த புல எண்களில் அவார்டு வழங்கப்பட்டுள்ளது. பணப்பட்டுவாடா செய்யப்பட வேண்டிய புல எண்கள் ஆகியவற்றை கேட்டறிந்து, இப்பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகள், மேல்முறையீடுகள் போன்றவற்றை விரைந்து முடிக்க தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்றுக் கேட்டுக் கொண்டார். அரசுப் புறம்போக்கு நிலங்களுக்கு முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுவிட்டதா? என்பதை கேட்டறிந்த அமைச்சர் அவர்கள், கொட்டிவாக்கம் கிராமத்தில், 270 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய் மற்றும் பாதாளச் சாக்கடைப் பணிகள் நிலுவையில் உள்ளது. இப்பணிகளை சென்னை குடிநீர் வாரியம் தனிக்கவனம் செலுத்தி பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென அறிவுறுத்தினார். இயந்திர துளை அமைக்கும்போது, நெடுஞ்சாலைத் துறையுடன் ஆலோசனை செய்து, பணிகள் உடனுக்குடன் முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

சுமார் 11 கிலோ மீட்டர் நீளத்தில், 2.750 கிலோ மீட்டர் நிலஎடுப்பு நிலுவையில் இருப்பதாலும், மின்பெட்டிகள் மற்றும் புதை மின்வடங்கள் மாற்றியமைக்கும் பணிகள், பாதாளச்சாக்கடைப் பணிகள் போன்றவை முடிக்கப்படாமல் சாலை விரிவாக்கப் பணிகளுக்கு இடையூறாக உள்ளது. இப்பணிகளை முடித்த பின்னர்தான் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள முடியும். எனவே, இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

பணிகள் நடைபெறும் போது, தேவையான சாலைகள் தடுப்பான்கள், முன்னெச்சரிக்கைப் பலகைகள் ஆகிய பாதுகாப்பு உபகரணங்களுடன் குழாய் பதிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அமைச்சர் அவர்கள், சம்மந்தப்பட்ட அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து கிழக்குக் கடற்கரைச் சாலைப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், சென்னை பெருநகர மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நீலங்கரை உதவி காவல் ஆணையர் ஏ.பாரத், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், சென்னை பெருநகரத் தலைமைப் பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், சென்னை குடிநீர் வாரியம் தலைமைப் பொறியாளர் ஆர்.கண்ணன், சென்னை பெருநகரத்திட்ட வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் பா.பாஸ்கரன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் நிலஎடுப்பு சென்னை விஜயராஜ், சென்னை மின்சார வாரியம் செயற்பொறியாளர் ஏ.ராமு, சென்னை பெருநகர கோட்டப் பொறியாளர் ராஜகணபதி மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




தஞ்சை வடக்கு மாவட்டக் கழக
நான்காவது பொது உறுப்பினர்கள் கூட்டம்

நாள் : 13.09.2024 வெள்ளிக்கிழமை / காலை 10.00 மணி
இடம் : T.S.மஹால், அசூர் பைபாஸ், கும்பகோணம்.

வரவேற்புரை : சு.ப.தமிழழகன் கும்பகோணம் மாநகர கழக செயலாளர்
தலைமை : க.நசீர் முகம்மது மாவட்ட அவைத் தலைவர்

முன்னிலை திருவாளர்கள் :
செ.இராமலிங்கம் Ex.MP தலைமை செயற்குழு உறுப்பினர்
க.அன்பழகன் MLA. தலைமை செயற்குழு உறுப்பினர்
மாண்புமிகு கோவி.செழியன் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா

சிறப்புரை :
மாண்புமிகு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA., அவர்கள்
பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திருமிகு. சு.கல்யாணசுந்தரம் MP அவர்கள்
தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர்

மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்ட கழக நிர்வாகிகள் :
ஆடுதுறை மு.உத்திராபதி இராம.விஜயன் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி
J.நடராஜன் S.துரைமுருகன் N.ஜெயலெட்சுமி

ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் :
கோ.தாமரைச்செல்வன் தியாக.சுரேஷ்குமார் T.கணேசன் சி.அம்பிகாபதி
கோ.க.அண்ணாதுரை P.S.குமார் S.K.முத்துசெல்வம் N.நாசர் மிசா N.மனோகரன்
J.சுதாகர் உதயா ரவிச்சந்திரன் இரா.செல்வராஜ் இரா.கல்யாணசுந்தரம்
T.V.கிருஷ்ணமூர்த்தி மு.கண்ணன் உதயா ரவிச்சந்திரன் இரா.செல்வராஜ்
இரா.கல்யாணசுந்தரம் T.V.கிருஷ்ணமூர்த்தி மு.கண்ணன் சுந்தர.ஜெயபால்
S.K.பஞ்சநாதன் வ.மகாலிங்கம் சீ.தாமரைச்செல்வன் கோ.சி.இளங்கோவன்
S.M.S.பாலசுப்ரமணியன் T.P.T.துளசிஅய்யா ச.கபிலன் T.M.சப்பாணி
J.ஜெப்ருதீன் V.சீனு (எ) சீனிவாசன் தியாக.ரமேஷ்

பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் :
மருது.நடராஜன் ரேவதி நடராஜன் இரா.அசோக்குமார் L.ராஜேந்திரன் G.கலியமூர்த்தி R.கருணாநிதி
K.V.கலைச்செல்வன் தேவி ரவிச்சந்திரன் சுபா திருநாவுக்கரசு
காயத்ரி அசோக்குமார் சுமதி கண்ணதாசன்

மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் :
G.K.M.ராஜா க.செந்தில்குமார் K.செல்வமுத்துக்குமரன் P.புகழேந்தி N.பாஸ்கரன்
சி.இராஜா R.முருகன் D.R.அனந்தராமன் மு.கோபிநாத் V.வினோத்குமார் தா.அனிபா
V.செல்வராஜ் R.ரகுபதி P.ரவிச்சந்திரன் சா.கணேசன் முனைவர் A.S.மூர்த்தி K.கெளரி
கோ.மாரியப்பன் K.K.S.ராஜா V.சிவக்குமார் D.பிரபு சீனிவாசன் V.N.R.லெட்சுமணன்

நன்றியுரை : கோவி.அய்யாராசு மாவட்ட துணை செயலாளர்

மற்றும் மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாமல் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக சர்வதேச முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்று திரும்பும்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
கழக தலைவர் அவர்களை
வருக! வருக! என வாழ்த்தி வரவேற்கின்றோம்...

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க.